**செய்தி வெளியீடு எண்:1308** **நாள்:09.12.2021**

**செய்தி வெளியீடு**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு நீர்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் வாங்குவதற்கு 2000 விவசாயிகளுக்கு மானியமாக ரூ.3 கோடி தாட்கோ மூலம் விடுவிக்க அரசு ஆணை.**

**********

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தங்கள் வேளாண் நிலத்தில் நீர்பாசனத்திற்கு பயன்படுத்தும் பிவிசி குழாய்கள் வாங்குவதற்கு தலா ரூ.15,000/- மானியமாக வழங்கப்படும் என அறிவித்தார்.

மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 1300 விவசாயிகள் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த 700 விவசாயிகள் தங்கள் வேளாண் நிலத்தில் நீர் பாசனத்திற்காக தேவைப்படும் பிவிசி குழாய்களை வாங்குவதற்கு ஒரு விவசாயிக்கு மானியமாக ரூ.15,000/- வீதம் 2000 விவசாயிகளுக்கு மானியமாக ரூ.3 கோடி தாட்கோ மூலம் விடுவிக்க நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன். இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**